# பத்தாந் திருமுறை

### திருமந்திரம்~திருமூலர்

திருச்சிற்றம்பலம்

சிவனோ டொக்கும் தெய்வம் தேடினுமில்லை
அவனோ டொப்பா ரிங்கு யாவருமில்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னும்
தவளச் சடைமுடித் தாமரை யானே.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே

நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவபெருமான் என்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாக் கொள்வனே.

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே.

சைவ சமயத் தனிநாயகன் நந்தி
உய்ய வகுத்த குருநெறி ஒன்றுண்டு
தெய்வச் சிவநெறிச் சன்மார்க்கம் சேர்ந்துய்ய
வையத் துளார்க்கு வகுத்து வைத்தானே.



# பதினோராந் திருமுறை

### கபிலதேவர்

திருச்சிற்றம்பலம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் –விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து.

### நக்கீரர்

முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே –ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்.

### பட்டினத்தடிகள்

வாழ்வாகவும் தங்கள் வைப்பாகவும் மறையோர் வணங்க
ஆள்வாய் திருத்தில்லை யம்பலத்தா உன்னையன்றி
தாழ்வா ரறியாச் சடிலநஞ்சை உண்டிலையாகில் அன்றே
மாள்வார் சிலரையன்றோ தெய்வமாக வணங்குவமே.

### நம்பியாண்டார் நம்பி

என்றும் அடியவர் உள்ளத் திருப்பன இவ்வுலகோர்
நன்று மலர்கொடு தூவித் துதிப்பன நல்லசங்கத்து
ஒன்றும் புலவர்கள் யாப்புக்குரியன ஒண்கலியைப்
பொன்றும் கவுணியன் சைவசி காமணி பொன்னடியே